# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 13 APRIL 01, 2003 பாலம் 07



வீடு விற்க,வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Sales Rep.)



இன்றைய சேவையே

நாளைய வெற்றி!

Office: 416.491.4002

Pager: 416.589.4270


## தமிழ் புதுவருட நல்வாழ்த்துக்கள்




## அருள்விருந்து

* தூய உள்ளம் படைத்தவனே இவ்வுலகம் அளிக்கின்ற இன்பத்தை அனுபவிக்கின்றான்.

* வினையிலேயே உழன்றுகிடப்பது வாழ்வின் நோக்கமன்று. கடவுளின் அருளைப் பெறுவது ஒன்றே வாழ்வின் நோக்கமாகும்.

* உலகம் உன்னை அறிந்து கொள்ளவில்லையே என்று விசனப்படவேண்டாம். பெரியாரை நீ அறிந்து கொள்ளவில்லையே என்று விசனப்படு.

* நமது வாழ்வில் ஒழுங்குப்பாடு இருக்க வேண்டும். சுறுசுறுப்பாக நாம் விளையாற்ற வேண்டும். நமது பேச்சில் இனிமை இலங்க வேண்டும்.

* யாரைப் பலசாலியென்கிறாய்? என்றார் குரு. "தோற்கடிப்பவன்" என்று சிஷ்யன் விடையளித்தான். "இல்லை, கோபத்தை வெல்லுபவனே பலசாலி" என்றார் குரு.

* ஆயுள் முழுவதிலும் அறிநெறி நிற்பவன் ஆனந்தம் அடைகிறான். மனக்கண் படைத்திருப்பவன் மேன்மையடைகிறான். தீமையினின்று விலகியிருப்பவன் திண்ணியன் ஆகிறான்.

## புலவர் வழி

புலவர்கள் சிந்தனைச் செல்வர்கள்; சிறந்த ஒழுக்க சீலர்கள்; சான்றாண்மை மிகுந்தவர்கள். சான்றோர்கள் குற்றம் குறை இல்லாதவர்கள். மற்றவர்களுக்கு வழிகாட்டவல்ல மனிதாபிமான வாழ்க்கை அவர்களது வாழ்க்கை. அதனால் எந்த இனத்திலும் அவர்களுக்குத் தனி மதிப்பு உண்டு.


சான்றோர்களாகிய புலவர்கள் காட்டும் வழி உயர்ந்த வழி. அவர்களது நோக்குப் பக்குவமானது. பக்குவமான பார்வையில் பாரபட்சம் கிடையாது. பாரபட்சமற்ற கருத்துக்கள் எல்லோருக்கும் ஏற்றவை; எக்காலத்துக்கும் பொருந்துபவை. ஓர் உயர்ந்த கருத்தை முன் வைக்கின்றார் சங்ககாலத்துப் புலவராகிய கணியன் பூங்குன்றனார்:

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானது
கல்பொருது இரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

பூங்குன்றனார் இங்கு எதனை வலியுறுத்துகின்றார் என்பதில் அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. பலரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். சில ஆழ்ந்த சிந்தனையாளர் 'ஆருயிர் முறைவழிப் படூஉம்' என்னும் கருத்தையே புலவர் வலியுறுத்துகின்றார் எனக் கருதுவர். கவிதையின் மையப் பொருள் முறைவழி - விதி வழி என்பதில் ஐயமில்லை. எனின், 'ஆகலின்' என்று கணித முடிவு ஒன்றை நிறுவுதல் போல அவர் வலியுறுத்துவது 'பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்பதாகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.

பெரியோர் சிறியோர் ஆவதெல்லாம் அவரவர் விதிப்பயன். 'அதனால் பெரியோரை யாம் புகழ்வதுமில்லை, சிறியோரை இகழ்வதுமில்லை' என்கிறார் புலவர். இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையிலேயே 'எல்லா ஊரும் எனது ஊரே' என்று தொடங்குகின்றார். அதாவது, ஊர்களிலும் பெரிது சிறிது என்றெல்லாம் அவர் பார்ப்பதில்லை. தொடர்ச்சி - 4ஆம் பக்கம்


வசந்தா நகை மாளிகை



தொழிற்சாலை

Since 1987

வசந்தன், பத்மநாதன் பத்தர்களின் கைவேலைப்பாடு

Tel: 905-848-5151

Fax:905-848-8502

10:00AM-8:30PM

திங்கள் மூடப்படும்

3025 HURONTARIO ST.
UNIT 103A
MISSISSAUGA, ON
L5A 2H1 CANADA

Singapore Communication

UNLIMITED TALKING*

only $40.00 / m

• 350 Mins Daytime Free • Evenings & Weekends Free

$30.00 / M

• 100 Mins Daytime Free • Evenings & Weekends Free
• V/M, C/D*, C/C & C/W FREE • Lunch Hour (12-1pm)

HURRY ALL PROMOTION ENDS THIS MONTH

OFFICE: 416-740-5292

5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

• Auto • Home • R.R.S.P • Life • Disability
• Mutual Fund • Group Insurance • Child Education • Travel & Business

416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

FAMILY MEDICAL CENTRE



DR. D. KURUNATHAN

(MBBS, MD, CCFP)

Female Family Physician

Tel: 416.293.7700

880 Ellesmere Rd., #201, Scarborough, ON HOPPER HUT இற்கு அருகாமையில்



# செய்யும் தொழிலில், வெற்றி பெற

இக்கட்டுரைத் தொடர் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருவது மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தருகின்றது. பல நுட்பங்களைத் தொடர்ந்து எழுத இருப்பதால், தொடர்ந்து கட்டுரைகளைப் படித்து வழக்கம் போல் உங்கள் கருத்துக்களை கட்டுரை ஆசிரியருடனும், 'விளம்பரம்' பத்திரிகையுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உற்சாகம், தோல்விகளுக்கு மத்தியிலும் தளராத உற்சாகம் வெற்றிக்கான வழி என்று முன்பே கண்டோம். உற்சாகம் தனக்குள்ளிருந்தும் வரலாம்; வெளியிலிருந்தும் வரலாம். ஆங்கிலத்தில் Motivation என்று சொல்வதுடன் உற்சாகத்தை ஒப்பிடலாம். இந்த உற்சாகமே 85சதவீத வெற்றிக்கான காரணம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். வாழ்க்கை, வியாபாரம் - இரண்டுமே ஏமாற்றங்களைத் தரக் கூடியதே. அந்த ஏமாற்றங்களை நீங்கள் எப்படி எதிர் கொள்கிறீர்கள் என்பதிலேயே உங்கள் வெற்றி அடங்கியுள்ளது. துன்பங்களும், துயரங்களும், ஏமாற்றங்களும், உங்களுக்கு நல்லதோர் படிப்பினையைத் தருகின்றன. கடந்த காலத் தவறுகளிலிருந்து உங்கள் வழிகளை மாற்றியமைத்துக் கொண்டு தொடர்ந்து முயலுங்கள். வெற்றி நிச்சயம். கடினமாக உழைத்தும் வெற்றி வரவில்லையா? அப்படியானால் இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். மேலும் கடினமாக உழைத்தால் மேலும் கடுமையான தோல்வியே ஏற்படும். பிறகு என்ன செய்ய வேண்டும்? உங்கள் முயற்சியைக் கைவிடாமல் செய்யும் முறைகளை மாற்றியமைத்துப் பாருங்கள். விடாமுயற்சி வெற்றியை நிச்சயம் தந்தே தீரும். பலரின் அனுபவம். பலபேர் கடின உழைப்பிற்கு ஆட்படுவதில்லை. உண்மையாகவும், நியாயமாகவும் உழைப்பதில்லை. அத்தகையோர்க்கு வெற்றி கிடைப்பதரிது. கிடைத்தாலும் நிலைப்பதில்லை; அப்படியே நிலைத்தாலும் மகிழ்ச்சி இருப்பதில்லை. அத்தகையோர் குற்ற உணர்வுக்கும், மனபயத்துக்கும் ஆளாகிறார்கள்.

ஒருவன் செய்வனவற்றை, செய்யும் தொழிலை - அது எதுவாயினும் திருந்தச் செய்து தானும் முன்னேற வேண்டும்; மற்றவர்களுக்கும் உதவவேண்டும். இவ்வாறு நினைக்கையில் வாழ்க்கை எளிதாகின்றது; வியாபாரம் எளிதாகின்றது; வாழ்க்கையாளர்கள் தேடி வருகிறார்கள். உண்மைச் சம்பவங்கள் இரண்டைப் பார்ப்போம். ஒன்று ஒன்ராரியோ மாநிலத்தில் நடந்தது, மற்றொன்று அமெரிக்காவில் நடந்தது.

முதலில் இங்கு நடந்த கதையைப் பார்ப்போம். மற்ற சமூகத்தைச் சார்ந்த பெண்மணிக்கு, மற்றவர்களுக்கு உதவுவது என்பது இயல்பான குணம். அக் குணத்தின் காரணமாக அவர் பல தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் ஒரு நர்சரி பள்ளி தாங்கள் $1500 நிதி திரட்ட விரும்புவதாகவும், அதற்கு இப்பெண்மணி உதவமுடியுமா என்றும் அப் பெண்மணியிடம் கேட்டனர். அவரும் ஒப்புக்கொண்டு நல்லதோர் 'முதல் உதவி' பற்றிய ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, அந் நிகழ்ச்சியின் போது வந்தவர்களுக்கு எல்லாம், முதல் உதவிக் கருவிகள் கொண்ட சிறிய பை (First aid kit) ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். $1500 வேண்டியவர்களுக்கு $8000 கிடைத்துவிட்டது.

அப்பெண்மணியோ தனக்கு உதவிய திருப்தியுடன் ஒரு தொழில் செய்யும் யோசனையும் கிடைத்ததாகக் கூறுகிறார். வீட்டிலிருந்த படியே இந்த முதல் உதவிக் கருவிப் பையை பல நிறுவனங்களுக்கும் விற்க ஆரம்பித்தார். இந்தப் பையை விலைக்கு வாங்கிய நிறுவனங்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்குமுகமாக வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பாகத் தரத்துவங்கின. வீட்டிலிருந்து ஆரம்பத்தில் மிகச் சிறிய அளவில் விற்பனையைத் துவக்கிய இப்பெண்மணி, இன்று மிகப்பெரிய அளவில் கடைவைத்து வெற்றிகரமாக வியாபாரத்தை நடத்துகிறார். அவருடைய இயல்பான உதவும் குணம் மீண்டும் மீண்டும் வாடிக்கையாளர்களை வரவழைக்கின்றது. இன்று தனது வியாபாரத்திற்கு என மேலும் பல புதிய பொருள்களைசை சேர்த்துள்ளார் இப் பெண்மணியும், மற்றவர்களைப் போலவே முதலில் வியாபாரம் செய்ய நினைத்த போது பல தோல்விகளை சந்தித்தாகக் கூறுகின்றார். அப்பெண்மணியின் கருத்துக்களிலிருந்து சில இதோ:-

- என் வியாபாரத்தை நான் ஆரம்பித்தபோது, இந்த உலகம் முழுவதுமே விற்பதற்கான என்னுடைய சந்தை என்று நினைத்தேன். அது தவறு என்று மிகவிரைவில் உணர்ந்தேன்.
- எனக்குப் பயன்தராத பலவற்றில் என் அறியாமையின் காரணமாக ஆரம்பத்தில் நேரத்தையும் பொருளையும் வீணடித்தேன்.
- உங்கள் தொழில் என்ன என்பதிலும், யாருக்கு விற்கப் போகிறீர்கள் என்பதிலும் சற்றுச் சந்தேகம்

## பெரி. முத்துராமன்

இருக்கக் கூடாது.
- நீங்கள் நினைப்பது சரியா என்று ஒரு சந்தை ஆய்வு செய்து பார்த்துக் கொள்ளல் நலம்.
- முதலில் என் பொருட்களை மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், நுகர்வோர் என எல்லோருக்கும் எல்லாப் பகுதிகளிலும் விற்க முயன்றேன்.
- மொத்த விற்பனையாளர் மூலம் விற்ற போது, நுகர்வோர், தாங்கள் கொடுக்கும் பணத்துக்குச் சரியான மதிப்பைப் பெறவில்லை என்று உணர்வதாக உணர்ந்தேன். இது சில்லறை வியாபாரி மற்றும் மொத்த வியாபாரிகளின் இலாபத் தொகையைப் பொருள் விலையில் சேர்ப்பதனால் விளைவது என்று விரைவில் உணர்ந்தேன்.
- பின்னர் நான் நுகர்வோருக்கு நேரடியாக ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் விற்பது மிகுந்த பயனைத் தரும் என்று உணர்ந்து வியாபார யுக்தியை மாற்றி அமைத்தேன். அன்று முதல் என் வியாபாரம் வளர ஆரம்பித்தது. இப்போது இணையத் தளத்தின் மூலமும் நுகர்வோருக்கு நேரடியாக விற்கின்றேன்.
- முதலில் உங்களுக்கு எனச் சிறப்பாக ஒரு சந்தையை உருவாக்குவதில் கவனத்தைச் செலுத்துங்கள்.
- சொந்தத் தொழில் என்பது கடின உழைப்பாகும்; உங்களுக்குப் பல விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும்; அல்லது யாரை அணுகினால் தெரிந்து கொள்ளலாம் என்பதாவது தெரிந்திருக்க வேண்டும்.
- ஆரம்பத்திலிருந்தே உங்களுக்கு அனுமதிப் பத்திரம் (licensing) வியாபாரத் திட்டமிடல் (Business Plan) விற்பனைத் திட்டமிடல் (Marketing Plan) பொருள் வளர்ச்சி (Product Development ) கடன் வாங்கும் முறைகள் மற்றும் பல்வேறு தொடர்புகள் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.
- என்னை நான் நாயுடன் ஒப்பிடுவேன். நாய் நட்புப் பாராட்டக் கூடியது; கடினமாக உழைக்கக் கூடியது; புத்திசாலியானது; நம்பகமானது; மிகவும் விசுவாசம் மிக்கது. வியாபாரத்தில் வெற்றிபெற இந்த நாயின் குணங்கள் எல்லாம் தேவை. உங்கள் வெற்றிக்குப் பெரிதும் உதவும் வாடிக்கையாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் விசுவாசமாய் (loyalty) இருங்கள்.
- இறுதியாக நீங்கள் வெற்றி பெறவேண்டுமாயின்

* உங்களையும், உங்கள் யோசனைகளையும் (ideas) நம்புங்கள்.

* மற்றவர்களிடமிருந்து உதவியைக் கோரத் தயங்காதீர்கள்.

* உங்கள் இலக்கையும் (goals), எதிர் பார்ப்புகளையும் நியாயமானதாக வைத்துக் கொள்ளுங்கள்.

* நீங்கள் வெற்றியடைந்த போது, அந்த வெற்றியை, அதற்குக் காரணமான மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அமெரிக்காவில் நடந்த இன்னொரு சம்பவத்தை அடுத்த இதழில் பார்ப்போம்.

நீங்கள் தொழிலில் வெற்றி பெற்றவர்களா? உங்கள் வெற்றியைப் பற்றி மற்றவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu business time மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தம்முடைய அனுபவத்தையும், அறிவையும் mentoring business நிறுவனத்தின் வாயிலாக வேண்டுவோர்க்கு வழங்குகிறார். இவருடன் தொடர்பு கொள்ள

Tel: 416-335-3381 e-mail: mentoringbusiness@yahoo.ca

**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**




வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.

முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



No Spraying
- No Smelling
- No Moving




**Call: Kanthan** **Tel: 416-283-9538**

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

**INCOME TAX**

- Incorporation
- Business Set-up & Registration
- Accounting & Bookkeeping
- Payroll, G.S.T. & P.S.T.
- Incomes Taxes (Free E-File)
- CCRA Audit and Appeals



Tarsem Parma

**FINANCIAL SERVICES**



- Mortgages

upto 1.5% below the bank posted rates

- Lines of Credit
- Business Loans
- Personal Loans

**PERMANENT RESIDENT CARDS**

Free Applications filled for Seniors for PR Cards
Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992

| Scarborough & Markham Area | Brampton |
|---|---|
| 416-937-1563 | 416-937-1563 |
| 2 Irenemount Cres., Markham (Markham Rd./Steeles Ave.) | 8 Strathearn Ave., Unit 1 (Dixie/Steeles) |

# APPLEMORE AUTOMOTIVE

**உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்**

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL



## தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் பட்டதாரிகள் ஒன்றியம் நடத்தும் சிறுவர்களுக்கான கோடைகால துடுப்பந்தாட்ட, உதைப்பந்தாட்ட பயிற்சிப் பட்டறைகள்.

இதன் நோக்கம் 7 வயதில் இருந்து 12 வயதிற்குள் உள்ள சிறுவர்களை உதைபந்தாட்ட மற்றும் துடுப்பந்தாட்ட விளையாட்டுக்களுக்கு அறிமுகப்படுத்தி, தக்க பயிற்சி அளித்து ஏனைய சிறுவர்களுடன் இணைந்து விளையாடும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவதாகும்.

இந்த பயிற்சிகளில் உங்கள் பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதற்கான பதிவுப் பத்திரங்களை நீங்கள் இப்போதே பெற்றுக் கொள்ளலாம்.

இந்த வருடத்திற்கான உதைபந்தாட்ட மற்றும் துடுபந்தாட்ட பயிற்சிகளும் விளையாட்டுகளும் சித்திரை மாதம் ஆரம்பமாக உள்ளது.

பதிவிற்கான கட்டணம் 50 டொலர்கள் மட்டுமே. இவ்விளையாட்டுக்கள் Scarborough East இல் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது. இது சம்பந்தமான அறிவிப்புகள் விளையாட்டு ஆரம்பமாகும் காலத்தில் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

உங்கள் பிள்ளைகள் உதைபந்தாட்ட விளையாட்டிற்கான "soccer cleets" and "shin pads"இற்களை முன் கூட்டியே பெற்றுக் கொள்ள வேண்டும். தொடர்புகளுக்கு: Tusgu at 416-439-8037
e-mail: info@tusgu.com
Office Location: Tamil University Students & Graduates Union
1085 Bellamy Rd. Office Numbers: 201 & 202, Scarborough, ON

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

## உலகத்தமிழர் இயக்க சமூக நூலகம், ஊர்ச்சங்கங்கள் / பழைய மாணவர் சங்கங்களுக்கு விடுக்கும் அன்பான வேண்டுகோள்

கனடாவில் தமிழ் கற்கும் மாணவர் தொகை பெருகி வருவதனாலும், பல்கலைக்கழக புகுமுக (OAC) வகுப்பிலும், இளங்கலைத் தமிழியல் (B.A Tamil Studies) வகுப்பிலும் கற்கும் மாணவர்களுக்கு ஊர்கள் பற்றிய கட்டுரைகள், மற்றும் இதர ஆக்கங்கள் செய்ய வேண்டி இருப்பதனாலும் அவர்கள் பல விபரங்களை சேகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர். ஆனால், இவற்றைப் பெற்றுக்கொள்வதில் அவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

எனவே எமது நூலகம் அவற்றை சேகரித்து அம்மாணவர்களுக்கு அவ்வப்போது குறிப்பெடுக்க உதவுவதற்கு உத்தேசித்துள்ளது. நாம் மேற்படி சங்கங்களுடன் தொடர்புகொள்வதற்கு எல்லாச் சங்கங்களின் தொலைபேசி இலக்கங்களும் எம் கைவசம் இல்லாமையால் இவ்வறிவித்தலை விடுக்க முடிவு செய்தோம்.

ஆகவே ஊர்ச்சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்களின் தலைவரோ அல்லது செயலாளரோ இவ்விடயத்தை மிக அவசரமாக கவனத்தில் கொண்டு தங்கள் தங்கள் சங்கங்களால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஆண்டு மலர்களில் குறைந்தது ஒரு பிரதியையாவது (ஆரம்பகாலம் தொட்டு) எமது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்து எதிர்காலத்திலும் அதனை தொடர்வீர்களாயின் எம் மாணவர் சமுதாயத்திற்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அவற்றை அன்பளிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

**"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"**

தொடர்புகளுக்கு: 39 Cosentino Dr., Scarborough, ON , M1P 3A3, (Midland & Progress)
T.P: 416-335-0622

## மகுடம் 2003

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கனடாவால் நடாத்தப்படும் வருடாந்தக் கலைவிழா, இவ்வாண்டு **"மகுடம் 2003"**, எதிர்வரும் ஏப்பிரல் 05ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5:30 மணிக்கு 4588 பாதரஸ்ட் வீதியிலுள்ள "Leash Posluns Theater"இல் இடம்பெறும். இவ்விழாவில் ரொறன்ரோவின் முன்னணிக் கலைஞர்களின், கல்லூரியின் பழைய மாணவர்கள் அவர்களின் வாரிசுகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு: திரு. சி. குகதாசன் 416-609-2274
திருமதி. சு. சுப்பிரமணியம் 416-269-1173
கே.ரி.எம். விஜயகுமார் 647-290-9794
திரு. யோ. தவலிங்கம் 416-267-0408
திருமதி. ஜெ. பரராஜசிங்கம் 416-283-5265
திரு. வெ. ராஜகுலேந்திரன் 416-286-9330
திரு. நா. தெய்வேந்திரன் 416-298-6139
திரு. எஸ். புவனேந்திரன் 416-418-8586
செல்வி பி. மகேந்திரன் 416-754-4864


**AVIS. RENT A CAR**



Main & Danforth
2575 Danforth Avenue
Tel: 416 691 3113

1345 Lawrence Ave E
(Victoria Park & Lawrence)
Tel: 416 441 1818

4352 Kingston Road
(Kingston & Lawrence)
Tel: 416 724 2847

1910 Yonge Street
(Yonge & Davisville)
Tel: 416 932 2847

AVIS
We try harder.
avis.com



# அன்புத் தமிழ்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

இந்த மனப் பக்குவதற்கு ஆதாரமாக மேலும் பல சான்றுகளைத் துணைக்கு எடுத்துக் கொள்கின்றார்.

'எல்லோரும் எனது உறவினரே. நன்மை தீமைகள் பிறரால் வருவன அல்ல. அவை தாமாக வினைப் பயன்களால் வருவன. இன்ப துன்பங்களும் அவ்வாறே. சாதலும் புதிதன்று. விருப்புற்ற போது வாழ்வை நல்லதென்றோ வெறுப.புற்ற போது அதனைக் கெட்டதன்றோ யாம் கருதுவதில்லை. ஆற்றிலே மிதந்து செல்லும் மிதவைபோல அரிய உயிர் விதி வழிப்பட்டுச் செல்லும். இதனை யாம் பகுத்தறிவாளர் நூலாலே தெளிவுற்றோம்' என்று கூறி 'ஆனதன்மையினாலே பெரியோரை யாம் போற்றுவதும் இல்லை, சிறியோரைத் தூற்றுவதும் இல்லை' என்று முடிக்கின்றார்.

இதனை வேறுவிதமாக, 'உயர்ச்சி தாழ்ச்சி சொல்லல் ஆகாது' என்றும் சொல்லலாம்.

ஏன்? எல்லோரும் ஒரு குலம். ஆருயிருக்கு வரக்கூடிய நன்மை தீமைகள், இன்ப துன்பங்கள், விருப்பு, வெறுப்பு, பிறப்பு, இறப்பு யாவும் ஊழின் வழியே நடைபெறுவன. ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம். அவற்றைக் கண்டு வேற்றுமைகள் பேசுவது நல்லதல்ல. பெருமை சிறுமைகள் அவரவர் கருமங்களால் வருவன. அவற்றைப் பெரிதுபடுத்துவதில் எவ்வித பயனுமில்லை.

இதனையே பாரதியார் மிக எளிமையாக

*சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்*<br>*தாழ்ச்சி இகழ்ச்சி சொல்லல் பாவம்*

எனக் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கின்றார்.

கணியன் பூங்குன்றனார் 'திறவோர் காட்சியில் தெளிந்தனம் ஆகலின்' இதனைச் சொல்லுகின்றேன் என்கின்றார். அதே வழியிற் பாரதியாரும்

*ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்கு*<br>*உண்மை தெரிந்தது சொல்வேன்*

என்று ஊர் நன்மை கருதிச் சில அறிவுரைகளைச் சொல்லத் தொடங்குகின்றார். அப்படித் தொடங்கு கையில் தம்மைச் சரியான முறையில் வழிப்படுத்த வேண்டும் என்று தெய்வத்தையும் வணங்குகின்றார்.

## கவிஞர் வி. கந்தவனம்

*சீருக் கெல்லாம் முதலாகும் - ஒரு*<br>*தெய்வம் துணைசெய்ய வேண்டும்.*

எவ்வளவு பொறுப்போடு கவிஞர்கள் தொழிற்பட வேண்டும் என்பதனை இந்த அடிகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் இனத்தின் முன்னேற்றத்துக்கு அவர் முன் வைக்கும் கருத்துக்கள் எத்தனையோ. அவற்றுள் ஒன்று இது:

*சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்*<br>*தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்*<br>*நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு*<br>*நித்தமும் சண்டைகள் செய்வார்.*<br>*சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு*<br>*தன்னில் செழித்திடும் வையம்*<br>*ஆதர வுற்றிங்கு வாழ்வோம் - தொழில்*<br>*ஆயிரம் மாண்புறச் செய்வோம்.*

உயர்ந்த கருத்துக்களை உலகுக்குச் சொல்வதைத் தமது கடமையாகக் கருதுகின்றவர்கள் புலவர்கள். உயர்ந்த கருத்துக்களாவன மக்களின் வாழ்வை உயர்த்தும் கருத்துக்கள்; காலத்தை வென்று கலங்கரை விளக்கம் போன்று மக்களை வழிப்படுத்தும் கருத்துக்கள். இவற்றை முன்னவர்கள் சொல்லி இருந்தாலும் கூட, தேவை கருதி நல்ல கருத்துக்களைப் புலவர்கள் வழிவழியாக வலியுறுத்தியே வந்திருக்கிறார்கள்.

உதாரணமாக, சாதி வேற்றுமைகள் அற்ற சமுதாயம் குறித்துப் பாரதியாருக்கு முன்னரும் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவ்வைப் பிராட்டியார், கவியரசர் கம்பர், சேக்கிழார் பெருமான் போன்றவர் வழியே பாரதியார் வழியும்.

*சாதி இரண்டு ஒழிய வேறில்லைச் சாற்றுங்கால்*<br>*நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்*<br>*இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்*<br>*பட்டாங்கில் உள்ள படி*

என்பது அவ்வையாரின் நல்வழி. நீதிநெறியில் வாழ்பவர்கள் உயர்ந்தோர், வாழாதோர் என்று அவ்வையார் வலியுறுத்துகின்ற பொழுது, சாதி பேதம் பார்க்கும் ஒரு சமுதாயம் நீதி நியாயம் அற்றது என்பது தெளிவாகின்றது.

ஒன்றே குலம் என்பதே இராமஇராச்சியத்தின் தாரகை மந்திரமுமாகும். உன்னதமான இந்தக் கருத்தை இராமர் வாயிலாக முன்வைக்கின்றார் கம்பர்:

*குகனொடும் ஐவர் ஆனோம்*<br>*முன்புபின் குன்று சூழ்வான்*<br>*மகனோடும் அறுவர் ஆனோம்*<br>*எம்முறை அன்பின் ஆனோம்*<br>*அகனமர் காதல் ஐய*<br>*நின்னொடும் எழுவர் ஆனோம்*<br>*புகலரும் கானம் தந்து*<br>*புதல்வரால் பொலிந்தான் நுந்தை.*

குகன் புளிஞர் வேந்தன். (புளிஞர் - வேடர்) சுக்கிரீவன் வானரர் தலைவன். வீடணன் அரக்கர் குலத்தவன். இவ்விதம் வெவ்வேறு குலத்தவரைச் சத்திரிய குலத்தவனான இராமன் தனது உடன்பிறப்புக்களாக அன்பு பாராட்டி, தன்னைத் தசரத மன்னன் காட்டுக்கு அனுப்பி மேலும் மூன்று புதல்வரைப் பெற்றுக் கொண்டான் என்று மகிழும் கட்டம் உலக ஒற்றுமையின் உச்சக் கட்டம்.

சைவ நீதியிலும் எல்லோரும் சமமாகக் கருதப்பட்டார்கள். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 'திருத்தொண்டத் தொகை' இறைவன் அடியார்களில் 'பெரியோர் சிறியோர்' பேதம் இல்லையென வெளிப்படையாகவே காட்டு கின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு சேக்கிழார் பெருமான் பல குலத்தவரின் பெருமையையும் பயபத்தியோடு திருத்தொண்டர் புராணத்திலே பரவுவதைக் காண்கின்றோம். எனினும் சைவ சமயம் சாதி வேறுபாடற்ற சமயம் என்பதனைப் பலர் தெளிவாக உணர்ந்திருப் பதாகத் தெரியவில்லை.

பொய்ம்மையாளரைப் பாடாத புலவர்களின் உயர்ந்த இலட்சியங்கள் தமிழ்ச் சமுதாயத்தில் இன்னமும் வேரூன்றாதிருக்கும் நிலை கவலைக்குரியது. முக்கியமாக, புலவர் வழிக்கும் பொதுமக்கள் வழிக்கும் வேறுபாடுகள் தொடர்கின்றன. காரணம் புலவர்களின் அறிவுரைகள் பொதுமக்களைச் சென்றடை யாமையே ஆகும். தொடர்ச்சி 9ஆம் பக்கம்



கனடாவில் முகம் மாறுவதை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது. உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் கனடாவை நோக்கி படையெடுப்பதைக் காணலாம். காலத்திற்கு காலம் கனடாவிற்கு குடிபெயரும் மக்களின் பிரதேசம் மாறுவது இயல்பாகவே காணப்படுகின்றது. உதாரணமாக சொல்லப் போனால், 1961 இற்கு முன்பாகா கூடிய மக்கள் பெரிய பிரித்தானியாவிலிருந்து வந்தனர். அண்மைக் காலங்களில் இந்தியா, இலங்கை, சீனா, கொங்கொங் போன்ற நாடுகளிலிருந்து கூடியளவு மக்கள் குடிபெயர்வதையும் காணலாம்.

கீழுள்ள அட்டவணை கனடாவிற்கு வெவ்வேறு நாடுகளிலிருந்து குடிபெயர்ந்தவர்களின் நாட்டுடனான எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

Where they come from


| Top 25 places of birth, ranked by period of immigration 1991-2001 | Immigrated Before 1961 | Immigrated Between 1991-2001 | Total Immigrants from all years |
|---|---|---|---|
| China | 3,935 | 85,345 | 136,135 |
| India | 740 | 81,840 | 147,165 |
| Philippines | 70 | 54,885 | 103,170 |
| Hong Kong | 360 | 50,805 | 110,735 |
| Sri Lanka | 40 | 50,425 | 68,790 |
| Pakistan | 75 | 39,265 | 51,185 |
| Jamaica | 1,405 | 25,360 | 92,190 |
| Iran | 30 | 23,840 | 34,930 |
| Poland | 11,080 | 21,555 | 70,490 |
| Yugoslavia (former) | 7,180 | 21,045 | 50,160 |
| Guyana | 725 | 20,800 | 66,980 |
| Russian Federation | 1,035 | 18,140 | 23,200 |
| South Korea | 35 | 16,930 | 31,080 |
| Trinidad and Tobago | 305 | 14,920 | 43,700 |
| Vietnam | 40 | 14,800 | 52,600 |
| Ukraine | 4,915 | 13,835 | 22,390 |
| Romania | 1,225 | 13,315 | 20,805 |
| United States | 4,380 | 11,345 | 37,795 |
| Yugoslavia | 2,625 | 10,985 | 21,115 |
| United Kingdom | 47,705 | 10,515 | 142,990 |
| Bangladesh | 0 | 9,800 | 11,890 |
| Taiwan | 10 | 9,565 | 14,765 |
| Afghanistan | 0 | 8,790 | 11,660 |
| Iraq | 15 | 7,990 | 11,080 |
| Somalia | 0 | 7,985 | 9,440 |


pundit prithipal
astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*

*Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances*

*CALL TODAY at 905-678-8932!*




Pundit Prithipal
26 Sledman St.
Malton, ON
L4T 1K5

tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"



ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416 - 750 - 8118

2381 Eglinton Ave., E., Kennedy / Eglinton, Scarborough





"...WHERE EVERYTHING IS A-1!"

A1 SWEETS & RESTAURANT




TAKE - OUT
DINE - IN
CATERING




100% Vegetarian Indian Cuisine

Enjoy our home-cooked taste!
Ask for our daily specials

Special price 11, 12, 13 April Only

Introducing special New Sweets
For Dusserah &Diwali!



TUESDAYSPECIAL
- MAKKI KI ROTI
- SARSON KA
- SAAG & LASSI ($3.99)

note
- BUY 3 THALI GET 4TH ONE FREE
- SPEND MORE THAN $50.00 GET A GIFT

- Appetizers
- Main Dishes
- Side Orders
- Indian Breads
- Namkins
- Sweets
- Desserts
- Beverages
- Veggie Thali ($4.99 + tax)
- Channa Bhatura ($2.99 + tax)

416-299-9424 1-866-422-1322

3300 McNicoll Ave. (at Middlefield), Near Scarborough Sikh Temple



# நாமும் நமது இல்லமும்
## 162

**புதிய பதிவுகள்**

54.792 புதிய வீடுகள் - விற்பனையில் சாதனை! சரித்திரம் மீண்டும் வீடு வியாபாரத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆண்டு 2002 இல் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) 54,792 வீடுகள் வாங்கப்பட்டு புதிய பதிவுகள் வைக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 2001இல் விற்கப்பட்ட புதிய வீடுகள் 41710. புதிய வீடுகள் விற்பனை 2002 இல் 77% Freehold ஆகவும் 33% கொண்டோமினியமாகவும் காணப்பட்டது.

**2002 TOP 25 BUILDERS BY SALES VOLUME**
(Singles, Semis and Townhomes)

| RANKING | BUILDER | TOTAL SALES |
|---|---|---|
| 1 | Mattamy Homes Ltd. | 3,035 |
| 2 | Greenpark Homes | 2,071 |
| 3 | Fernbrook Homes | 1,572 |
| 4 | Great Gulf Homes | 1,560 |
| 5 | Aspen Ridge Homes | 1,156 |
| 6 | Tribute Communities | 1,126 |
| 7 | H & R Developments | 892 |
| 8 | The Remington Group | 703 |
| 9 | Fieldgate Dev. & Con. | 702 |
| 10 | Starlane Home Corp. | 663 |
| 10 | Heathwood Homes | 663 |
| 12 | Townwood Homes | 646 |
| 13 | Arista Homes | 638 |
| 14 | Royal Pine Homes | 540 |
| 15 | Century Grove Homes | 492 |
| 16 | The Conservatory Group | 475 |
| 17 | Sundial Homes Limited | 471 |
| 18 | First View Properties Inc. | 465 |
| 19 | National Homes | 461 |
| 20 | Monarch Construction | 459 |
| 21 | Cachet Estate Homes | 442 |
| 22 | Pratt Construction | 441 |
| 23 | Laurier Homes Limited | 440 |
| 24 | Madison Homes | 439 |
| 25 | Ballantry Homes | 428 |
| | Total Sales | 20,980 |
| | Total GTA Low-Rise Homes Sold in 2002 41,680 | |


ஒவ்வொரு கொண்டோவிற்கும் 2 Freehold வீடுகள் விற்கப்பட்டுள்ளது. இதே விகிதம் 2001 இல் 69% இற்கும் 31% ஆகக் காணப்பட்டது.

வீடு கட்டி விற்கும் நிறுவனங்கள் ஒன்ராரியோ கனடாவில் நிறைய இருந்தபோதும் ஒரு குறிப்பிட்ட நிறுவனங்களே கூடிய வீடுகளைக் கட்டி விற்கின்றன.

GTA (Grater Toronto Area) இல் ஆகக் கூடிய வீடுகள் விற்ற முதல் 25 வீடுகளும் நிறுவனங்களும் அவை வீற்ற வீடுகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.


## ராஜா மகேந்திரன்

### HOUSE FOR SALE



- 2 STOREY LINK HOUSE
- FINISHED BSMT
- BRIMLEY &DENISON
- 3 Bedroom • 2 WASH-ROOM
- Asking only $249,900.00

### BUILDING FOR SALE


- Asking Price $729,000.00

### HOUSE FOR SALE



- Markham & Sheppard
- 4 Bedroom detached house
- 3 Car parking
- 3 Washroom
- Walkout basement
- 1 Bedroom BSMT apt. with kitchen
- Asking $259,900.00

### CONDO FOR SALE




- Neilson & Sheppard
- 2 Bedroom
- Corner Unit
- Good Layout
- 1 Car parking
- Asking only $135,000.00

### CONDO FOR SALE



- Neilson & MCLEVIN
- 2 Bedroom
- 2 Washroom
- Corner Unit
- Good Layout
- Car parking
- Open Balcony
- Asking only $164,900.00

### FREE HOLD TOWN HOUSE FOR SALE



- Neilson & Sheppard
- 3 Bedroom
- 3 Washroom
- Single attached garage
- Basement apartment possible
- Asking $217,000.00

Raja M. Mahendran P.Eng.
T.P: Office- 416-491-4002
Pager - 416-589-4270

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 5.20% |
| Prime rate | 4.75% |
| Bank rate | 3.00% |


*10 ஆம் பக்கத் தொடர்ச்சி*

*ஆமாம்! ஒரு சவாலை எதிர்கொண்டு ஒரு தடையைத் தவிடு பொடியாக்கி தோல்வியடையாது ஒரு பிரச்சனையைத் தீர்ப்பது உங்கள் வளர்ச்சியின் அடையாளம். எவ்வளவு வளர்கின்றோமோ அவ்வளவிற்கு எமது அறிவும் அநுபவமு் பெருகுகின்றது.*

*1969 சந்திரனில் கால் பதித்ததால் உலகமட்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டதா என்பதைச் சிறிதும் சிந்திக்காத உலக வல்லுனர்கள் தம் இறைமையைப் பறைசாற்ற அண்டசராசரங்களை ஊடுருவி மேன்மேலும் எவ்வளவோ செலவு, எவ்வளவோ முயற்சியுடன் விபத்துக்கள், உயிரிழப்புக்களையும் பொருட்படுத்தாது தொடர்ந்தும் விண்வெளிப் பயணங்களை ஊக்குவிக்கும் இருபத்தியோராம் நூற்றாண்டு இது. இவ் விண்வெளி ஆராய்ச்சிச் செலவின் ஒரு சிறு பகுதியையாயினும், எம் ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்திருக்கும் அண்டசராசர வெளியாகிய எம் மனதின் நுட்பதிட்ப எல்லைகளையும் நித்யத்தவ ஆன்மாவின் இரகசியத்தையும் எம் வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள் தான் என்ன என்பதையும் அலசி ஆராய்ந்தறிய உபயோகித்தால் தொடர்ந்து சீர் குலைந்துகொண்டே போகும் மானுடம் புத்துயிர் பெற்று முன்னேறுமல்லவா?*


## EDUCATION FUND SERVICES Inc.

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்



Siva Kanapathypillai
(Divisional Director)

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044
Fax: 416-438-8532 Res: 905-472-1139
1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

**முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.**

## யோகா சோதிடம்



- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்
- பலன் பார்த்தல்

**416-299-8361**

## MORTGAGES



*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*

*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply



For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**

## வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள்

"வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலியில்லை புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி பெற்றதில்லை" என்பது சினிமாப் பாடலடிகள். எனவே மலை போன்ற சகிப்புத் தன்மை, இடைவிடாத முயற்சி, எல்லையற்ற பரிசுத்தம் இனவாதம் நற்காரியத்தில் வெற்றியைத் தரும் இரகசியம் என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

ஒவ்வொருவரும் தான் நினைத்தால் மகாத்மாவாக உயர முடியும். அதற்குரிய பத்துக் கட்டளைகள் பின்வருமாறு.

1. உங்களுடைய ஆளுமையை உடல், உளம், ஆன்மா இவற்றை உயர்த்திக் கொள்ளுங்கள்.
2. வாழ்க்கையில் இலக்கு, இலட்சியம், குறிக்கோள் இவற்றை வரைமுறை செய்து கொள்ளுங்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் பாதை தவறாதீர்கள்.
3. பலனை எதிர்பாராது கருமமாற்றுங்கள் அது உங்களுடைய கருமங்களில் ஒன்று என்று நினைத்து பணியாற்றுங்கள்.
4. உடல் ஒழுக்கம், வாய்ச்சொல்லில் நேர்மை பேணுதல், மற்றும் எண்ணத்தால், சொல்லால், செயலால் யாருக்கும் பகைவனுக்கு கூட தீங்கு வராத செயல்களைச் செய்யுங்கள்.
5. புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாக மதியுங்கள். காழ்ப்பும் கசப்பும் கொள்ளாதீர்கள்.
6. நீங்கள் குடிசையில் வாழ்ந்தாலும் மாளிகை வாசம் போல் வசந்தமாக்கி வாழக் கற்றுக் கொள்ளுங்கள். எது நம்மிடம் இல்லையோ அதைப் பற்றி நினைக்காது வாழுங்கள்.
7. உங்களால் செய்யப்படுகின்ற ஒவ்வொரு செயலையும் உங்களின் ஆன்ம பரிசோதனைக்கு உட்படுத்தி இராமனின் சீதை போல் தீக்குளித்து வெளிவரச் செய்யுங்கள்.
8. மரணத்தைக் கண்டு பயப்படாதீர்கள். மரணம் எந்த நேரத்தில் வந்தாலும் வரட்டும் என்ற உள்ள உறுதிப்பாடு கொண்டிருங்கள். அப்போது அச்சம் உங்களை விட்டு ஓடிவிடக் காண்பீர்கள்.
9. எப்போதும் மகிழ்வாக இருங்கள் செய்த தவறுக்கு தலைவணங்கி மன்னிப்புக் கேட்கக் கூடத் தயங்காதீர்கள். தவறு திருந்திவாழ உதவும் முதற்படி என்பதை உணருங்கள்.
10. எல்லாவற்றிற்கும் மேலாக உண்மை, நேர்மை இவற்றில் நீங்கள் வழுவாமல் இருந்தால் உயர்வது உறுதி எல்லா மேன்மைக்கும் உண்மைதான் அடித்தளம் என்பதை உணருங்கள்.

**நா. க. சிவராமலிங்கம்**

உன்னைக் கடைசியாக நேசி. உன்னை வெறுப்பவர்களைப் போற்று. அச்சத்தை விடு நீ எதிர்பார்க்கும் நோக்கங்களெல்லாம் நாட்டிற்காகவும் உண்மைக்காகவும் இருக்கட்டும். அந்நிலையில் நீ வீழ்ந்து போனாலும் மகாத்மாவாகி விடுவாய் என்றார். ஆங்கில நாடகப் பேராசான் ஷேக்ஸ்பியர்.

உள்ளத்தனையது உயர்வு என்பது வள்ளுவம் வலியுறுத்தும் பேருண்மை.


**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


**வானத்தில் பறப்பது நீங்கள்**
**வசதிகள் செய்து தருவது நாங்கள்**

FLYAIR TRAVEL INC.

நகரில் மிகக்குறைந்த விலையில் விமானப் பயணச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

Tel: 416-285-9900
Fax:416-285-9800
e-mail: flyair@bellnet.ca




* ஒவ்வொரு ஆணிடமும் பெண்ணிடமும் பிறர் கண்டு பிரீதி கொள்ளக் கூடிய ஏதாவது அம்சம் இல்லாமல் போகாது. இந்த அம்சத்தை கணவன் மனைவியிடமும் மனைவி கணவனிடமும் கண்டுணர முற்பட்டால் அவர்களிடையே உண்மையான காதல் மலர்ந்து குடும்ப வாழ்க்கையில் இனிமையைச் சேர்க்கும்.

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்கள் பக்கங்கள் 17, 18, 19**






# விளையாட்டுத் தகவல்கள் - 120
# உலக கோப்பை - 2003 கிரிக்கெட்



### சிறப்புக் கண்ணோட்டம்

## மூன்றாவது முறையாக அவுஸ்திரேலியாவுக்கு உலககிண்ணம்



ஜோகன்னஸ்பேர்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உலகக் கோப்பைக்கான இறுதி ஆட்டத்தில் செஞ்சரி அடித்ததும் கையை உயர்த்தி ஆனந்தப்படுகிறார் அவுஸ்திரேலிய அணிக் கப்டன் ரிக்கி பாண்டிங். இவர் 121 பந்துகளில் 140 ஓட்டங்களைக் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியாவை 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து உலகக் கோப்பையைத் தக்கவைத்துக் கொண்டது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியாவுக்கு மற்றோர் பெருமை: இறுதி ஆட்டத்தின் புள்ளி விபரத் தொகுப்பு



(இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே ஜோகன்னஸ்பேர்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தின் புள்ளி விபரத் தொகுப்பு.)

இந்த ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது. உலகக்கோப்பை இறுதி ஆட்டங்களில் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற பெருமையை அவுஸ்திரேலியா பெற்றது. 1979இல் லார்ட்ஸில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிராக மேற்கிந்தியத் தீவுகள் 92 ஓட்டங்களில் வென்றதே இதற்கு முன் அதிக பட்ச வித்தியாசத்துக்கான சாதனை.

அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 359 ஓட்டங்கள் குவித்தது. ஒரு தின ஆட்டங்களில் இந்தியாவுக்கு எதிராக அதிக பட்ச ஓட்டக் குவிப்பு இதுதான். 1999-2000த்தில் ராஜ்கோட்டில் நியூஸிலாந்து 9 விக்கெட் இழப்புக்கு 349 ஓட்டங்கள் குவித்ததே இதற்கு முந்தைய அதிக பட்ச ஓட்டக்குவிப்பு.

உலகக் கோப்பைகளில் அவுஸ்திரேலியாவின் ஒட்டுமொத்த அதிகபட்சமும் இதுதான். 1975இல் ஓவலில் இலங்கைக்கு எதிராக 5 விக்கெட் இழப்புக்கு 328 ஓட்டங்கள் எடுத்ததே இதற்கு முந்தைய அதிகபட்சம்.

உலகக் கோப்பைகளில் இந்தியாவுக்கு எதிரான அதிகபட்சமும் இதுதான். 1983இல் நோட்டிங்ஹாமில் 60 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 320 ஓட்டங்கள் விளாசியதே இந்தியாவுக்கு எதிராக அவுஸ்திரேலியாவின் இதற்கு முந்தைய அதிகபட்சம்.

உலகக்கோப்பைகளில் 4வது அதிகபட்ச புள்ளிவிபரம் இது. 1996இல் கண்டியில் கென்யாவுக்கு எதிராக இலங்கையும் (398-5), 1999இல் டௌண்டனில் இலங்கைக்கு எதிராக இந்தியாவும் (373-6), 1987இல் கராச்சியில் இலங்கைக்கு எதிராக மேற்கிந்தியத் தீவுகளும் (360-4) அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்துள்ளன.

**கில்கிறிஸ்டின் சிறப்பு:** ஒரு தின ஆட்டங்களில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்த 2வது விக்கெட் காப்பாளர் என்ற பெருமையைப் பெற்றார். அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் 157 ஆட்டங்களில் 5,016 ஓட்டங்கள் (சராசரி 34.12) சேர்த்துள்ளார். சிம்பாப்வேயின் ஆன்டிஃபிளவர் 185 ஆட்டங்களில் 5,835 ஓட்டங்கள் (சராசரி 34.73) குவித்துள்ளார்.

**மார்ட்டின் - இந்தியாவுக்கு எதிராக அதிகபட்சம்:** இந்த ஆட்டத்தில் டேமியன் மார்ட்டின் ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியாவுக்கு எதிராக அவரது அதிகபட்ச ஓட்டக்குவிப்பு இது. 1997-98இல் ஷார்ஜாவிலும், 1999-2000இத்தில் மெல்பேர்னிலும் 30 ஓட்டங்கள் எடுத்ததே இதற்கு முந்தைய அதிகபட்சம். இதற்கு முன் இந்தியாவுக்கு எதிராக 15 ஆட்டங்களில் 156 ஓட்டங்கள் மட்டுமே (சராசரி 17.33) எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரெட் லீ 22 விக்கெட்:** வேகப் பந்துவீச்சாளர் பிரெட் லீ இப்போட்டியில் 22 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். ஓர் உலகக் கோப்பையில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை லீ பெற்றார். சுழல் பந்து வீச்சாளர் வார்ன் 1999இல் 20 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதே இதற்கு முந்தைய சாதனை.

இதுவரை உலகக் கோப்பைகளில் மெக்ராத் 28 ஆட்டங்களில் 45 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார். வாசிம் அக்ரம் மட்டுமே (38 ஆட்டங்களில் 55 விக்கெட்) மெக்ராத்தை விட அதிக விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார். இந்தியாவின் ஸ்ரீநாத் (34 ஆட்டங்களில் 44 விக்கெட்) 3ஆம் இடத்தைப் பிடித்துள்ளார்.

**ஸ்ரீநாத்தின் சாதனை (?):** ஸ்ரீநாத் 10 ஓவர்களில் 87 ஓட்டங்கள் வாரி வழங்கினார். ஒரு தின ஆட்டங்களில் அதிக ஓட்டங்கள் கொடுத்த

**எஸ். கணேஷ்**

இந்திய வீரர் ஸ்ரீநாத்தான். இதற்கு முன்னர் 1999-2000த்தில் டாக்காவில் ஆசிய கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிராக டி. குமரன் 10 ஓவர்களில் 86 ஓட்டங்கள் வழங்கினார். 1975 உலகக் கோப்பையில் லார்ட்ஸில் இங்கிலாந்துக்கு எதிராக கார்சன் காவ்ரி 11 ஓவர்களில் 83 ஓட்டங்கள் வாரி வழங்கினார்.

ஜாகீர் கான் 7 ஓவர்களில் 67 ஓட்டங்களை (சராசரியாக ஓவருக்கு 9.57 ஓட்டங்கள்) வழங்கினார். சராசரி ஓட்டங்களைக் கணக்கில் கொண்டால், உலகக் கோப்பைகளில் இந்திய வீரரின் மிக மோசமான பந்துவீச்சு இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

**கங்குலி - உலகக்கோப்பைகளில் அதிக சிக்கர்:** உலகக் கோப்பைகளில் அதிக சிக்சர்கள் (23) அடித்தவர் என்ற பெருமையை கங்குலி பெற்றுள்ளார். மேற்கிந்தித் தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸ் 22 சிக்கர்கள் அடித்திருந்ததே இதற்கு முந்தைய சாதனை.

**தெரிந்து கொள்ளுங்கள்**

- ✧ ஐரோப்பாவில் மிக உயரமான மலை மாண்ட் ப்ளாங்க் (Mont blanc).
- ✧ "சுவீடன்" நாடுதான் நள்ளிரவுச் சூரியன் நாடு எனப்படுகிறது.
- ✧ "ஜப்பான்" உதய சூரியன் நாடு எனப்படுகிறது.


# J DAYCARE



- மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

**தினசரி நடவடிக்கைகள்** * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்


151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount)

**416-502-3033**



## தமிழர் நிர்வாகத்தில் ஒரு
# EMBASSY

**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**



- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்:
416-332-0944

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough **416-332-8451**



## தொழில் புரிய முடியாத நேரத்தில் உதவுபவர் - யார்?



- * $1000 வருமானவரி அற்ற மாத வருமானம். (2 வருடங்கள் வரை)
- * 65 வயது வரை நன்மை (benefit) பெறலாம்.
- * 24 மணிநேர பாதுகாப்பு.
- * மருத்துவப் பரிசோதனை தேவை இல்லை.
- * உடனடிக் கொடுப்பனவு (No waiting period)
- * $100,000 வரையான ஒரு கட்டக் கொடுப்பனவு.

** சில நிபந்தனைகளுடன்*

**$53.20 /mth**

### மேலும் எங்களிடம் பெறக் கூடிய சேவைகள்

- Life insurance
- Critical illness insurance
- Mortgage insurance
- Health and Dental Benefits
- Registered Education Savings Plan (RESP)
- Investments and savings plan
- RRSP loan

இவை பற்றிய பூரண ஆலோசனைகளைப் பெற

**Ken Teh - 416.803.6096**
**kenteh@sympatico.ca**

# “கடன் செய்து கொடுப்பதே”



கடன்கோவையும் கடன் அறிக்கையும் - கனடா வாழ்வில் இவற்றின் பங்கு

“எனக்குப் போதிய வருமானம் இருக்கு. Credit history இல்லாதபடியால் கார் லோன் எடுக்க முடியாமல் கிடக்கு”.

“கனடாவிற்கு வந்த புதிதில் கவனமில்லாமல் நடந்து Credit Rating ஐப் பழுதாக்கினதாலை குறைந்த வட்டிக்கு mortgage செய்ய முடியாமல் திண்டாடுறன்.”

இப்படியான உரையாடல்கள் பலவற்றை அடிக்கடி கேள்விப்படுகிறோம். நேரடியாக எங்களுக்கு ஒரு தேவை ஏற்படும் வரை நாங்கள் இவற்றைக் கவனத்தில் எடுப்பதில்லை.

கிறடிற் வரலாறு; கிறடிற் Rating என்பன பற்றி சுருக்கமான விளக்கம் தருவதும், உலோகாயத வாழ்வில் இவற்றின் அவசியம் பற்றி அறிந்து கொள்ளுவதும் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

பணக் கொடுக்கல் வாங்கல் (Financial Transaction) விடயங்களில் ஒருவரின் ஒழுங்கு முறைகளையும், நாணயத்தினையும் அறிந்து கொள்வதற்கான ஒரு அளவு கோல்தான் Credit Rating System ஆகும். பொதுவாக கடன் கொடுப்பவர்கள் கடனுக்கு விண்ணப்பிப் பவர்களின் முன்னைய கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும், விண்ணப்பதாரியின் குணாதிசயத்தை ஓரளவு அறிந்து கொள்ளவும் Credit Rating System பெரிதும் உதவும். கடன்வரலாறு (Credit History) ஒருவர் முதன்முதலில் தனது வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும் போது தொடங்குகிறது. நிதிநிறுவனங்கள், வங்கிகள், வியாபார நிலையங்கள் ஆகியன ஒவ்வொருவரினதும் Reporting கொடுக்கல் வாங்கல், கடன் விபரங்களை Credit Agencyஎன அழைக்கப்படும் அமைப்பிற்கு தெரியப்படுத்துகின்றன. Equifax Inc, Trans Union என்பன கனடாவின் பிரதான Credit Reporting அமைப்புகள் ஆகும். இவை Credit Bureau என்றும் அழைக்கப்படும். இந்நிறுவனங்கள் தாம் பெறும் விபரங்களைச் சேகரித்து ஒவ்வொருவருக்குமான கடன் கோவைகளைப் பேணிவருகின்றன. அவசியம் ஏற்படும் பொழுது அங்கத்துவ நிறுவனங்கள் உங்களது அனுமதியுடன் கடன்கோவைகளின் அடிப்படையில் பெறப்படும் Credit Report (கடன்அறிக்கை) பரிசீலிக்க முடியும். மேலும் தனிநபர்களும் தங்கள் Credit Report ஐப் பெறமுடியும்.

கடன் அறிக்கையின் இடம்பெறும் விபரங்களைப் பின்வருமாறு நிரல்படுத்தலாம்.

1. Personal Identification - பெயர், விலாசம், பிறந்ததிகதி, S.I.N
2. Inquires - உங்களது கடன் அறிக்கையைப் பெற்ற நிறுவனங்கள், தனிநபர் நிரல்.
3. Public Record Information - ஈடாகப் பெற்ற கடன் விபரங்கள் (Secure Loans), வங்குரோத்து (Bankruptcy) மற்றும் நீதிமன்ற தீர்வுகள் (judgements)
4. Third-Party Collection Agency - கடன் அறவிடும் நிறுவனங்கள் தலையிட்டு அறவிட்ட / அறவிட முயன்ற விபரங்கள்
5. Trade Information: சகல கடன் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் விபரங்கள். ஒவ்வொரு கடனும், கொடுத்தவர்களால் தரப்படுத்தப்பட்ட (Rating) அடையாளமும் உள்ளடங்கும். உதாரணமாக 30 நாட்களுக்குள் செலுத்தப்பட

## N. முருகதாஸ்

வேண்டிய Credit Card தவணைப் பணம் குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டால் R1 என்றும் 60 நாட்களுக்குள் செலுத்தப்பட்டால் R2 என்றும் தரப்படுத்தல் வழக்கம். R9 என்ற தரம் அறவிட முடியாத கடன் (Bad Credit) என்று கருதப்படும்.

6. Consumer Statement: குறைந்த தரமுள்ள ஒரு கடன் அறிக்கையில் சம்பந்தப்பட்ட ஒருவர் அதற்கான காரணத்தை தெரியப்படுத்தக் கொடுக்கப்படும் சந்தர்ப்பம் இதுவாகும். உதாரணமாக R9 நிலையில் உள்ளவர், அந்த நிலைக்குத் தனது சுகவீனம், வேலை இழந்தமை போன்ற அசாதாரண நிகழ்வுகளைக் காரணமாகக் காட்டலாம். உங்கள் கடன் அறிக்கையைப் பெற்று அதிலுள்ள விபரங்கள் சரியானவை என்று பரிசீலிப்பது மிகவும் நன்மை பயக்கும். பின்வரும் வழிகளில் உங்கள் கடன் அறிக்கையைப் பெறலாம்.

Request form ஒன்றினைப் பூர்த்தி செய்து கடன் அறிக்கை அமைப்பான Equifax Canada Inc அல்லது Transunion of Canadaஇற்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். விண்ணப்பத்தினை Internet மூலம் (down load) அல்லது தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளும் விபரங்கள் பின்வருமாறு:

www.equifax.com - 1-800-465-7166
www.transunion.com - 1-800-663-9980

இணையவலை (internet) மூலமும் உங்கள் கடன் அறிக்கையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவரது கடன் அறிக்கையை அவரது அனுமதியின்றி கடன் வழங்கும் நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளக் கூடாது. பொதுவாக ஒரு கடன் அல்லது கடன் அட்டை விண்ணப்பத்தல் இதற்கான அனுமதி வழங்கும் வசனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

மிகப்பெரிய கடன்அறிக்கை செய்யும் (Credit Reportion) நிறுவனமான Equifax ஒரு வருடத்தில் சராசரி 4.0 மில்லியன் விண்ணப்பங்களைக் கையாளுகின்றது.

உங்கள் கடன் அறிக்கையில் தவறான விபரங்கள் இடம் பெற்றிருக்கின்றதென்று நீங்கள் அறியும் பட்சத்தில் சரியான விபரங்களை ஆதாரத்துடன் சமர்ப்பித்து (Equifax or Transfection) அவற்றைத் திருத்திக் கொள்ளலாம். இது ஒரு நீண்டகால நடவடிக்கையாகும். எனினும் முக்கியமானதன்று.

கடன் அறிக்கையை ஆராயும் முறையையும், கடன் நிலையை நல்ல படியாக வைத்திருப்பதன் அவசியம் பற்றியும், பழுதான தரத்தை (Bad Credit) ஒழுங்குபடுத்தும் விதத்தையும் அடுத்த கட்டுரையில் பார்ப்போம்.

* மகத்தான பணிகளைச் சாதிக்கும் மகான்கள் எல்லாம் பெரும்பான்மையான மக்களின் நன்மைக்காகத்தான் தங்கள் சிந்தனை, செயற்பாடு ஆகியவற்றை செலவிடுகிறார்கள் என்றாலும் அவர்களை எதிர்த்து துஷித்து அழிக்கவும் மக்களில் சிலர் முற்படுவது உண்டு. ஆனால் மகான்கள் இதைப் பொருட்படுத்துவதே இல்லை. இத்தகைய எதிர்ப்பினைக் கண்டு அஞ்சி தங்கள் கடமைப் பொறுப்பினையும் கைவிட்டு விடமாட்டார்கள்.

* சிக்கல் இல்லாமல் ஓர் இயந்திரம் வேலை செய்வதற்கு அதில் போடப்படும் எண்ணெய்தான் உதவும். இதே போன்று வாழ்க்கை என்ற இயந்திரம் சிக்கல் இல்லாமல் இயங்க மரியாதை என்ற எண்ணெய்யை அதில் தொடர்ந்து போட வேண்டும்.


கோடை காலத்தில் கொள்ளைகள் அதிகம்

உங்கள் வாகனங்களைப் பாதுகாத்துக் கொள்ள
Car Alarm (Computer Start Pager Alarm)
எவ்வகையான Alarm ஆனாலும் ஒரு
மணிநேரத்தில் செய்து கொடுக்கப்படும். மற்றும்
House Camara, All Kind Of Electronic Works
உடனடி சேவை



அழையுங்கள்: RAJ 416.315.2917


4ஆம் பக்கத் தொடர்ச்சி

கல்வி வசதிக் குறைவு, வறுமை புலவர் வழிகளைப் போற்றாத கல்வித் தத்துவம், போற்றினாலும் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்காத ஆசிரிய உலகம் முதலாய சக்திகள் காலம் காலமாகவே புலவர் நெறிக்கும் பொதுமக்கள் உலகத்துக்கும் குறுக்கே நின்று வருகின்றன. இந்தச் சக்திகளை எல்லாம் கடந்து புதுக் கவிதைகள் பொதுமக்களைச் சென்றடையும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆயின் இன்று புதுக்கவிதைகளிற் பெரும்பாலானவை இந்த எதிர்பார்ப்புக்கு எதிர் நீச்சல் போடுபவையாகவே காணப்படுகின்றன. கவித்துவத்தில் கருத்துக்களைக் கொலு வேற்றுவதை விடுத்துச் சொற்பொருளைக் கசக்கிக் குட்டை குழப்பும் கவிதைகளே புற்றீசல்களோடு போட்டியிடுகின்றன. இவற்றால் யாருக்கு என்ன பயன்? மூன்று பேர் கூடி ஒருவருக்கொருவர் முதுகு சொறிவதனால் பொதுமக்களுக்கு என்ன பயன்? பொதுமக்களைப் பற்றியே பாடுகிறோம் என்று கூறும் புதியுகக் கவிஞர்களுக்கு, தமது ஆக்கங்கள் பொதுமக்களுக்கு விளங்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. கவிஞன் அறிவுலகத்துக்கு மட்டும் உரியவனல்லன்.

மக்கள் யுகக் கவிஞர்களான பாரதியார், ஈழத்துச் சோமசுந்தரப் புலவர், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, கண்ணதாசன் போன்றோர் வழியைவிட்டுப் புதுக்கவிஞர்கள் சங்ககாலம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படியும் சொல்லிவிட முடியாது. சங்க காலத்துக் கவிதைகள் பல இக்காலத்துப் புதுக் கவிதைகளிலும் எவ்வளவோ எளிமையானவை. எனினும் தமது தேவைக்கு மட்டுமே வலைகளைப் பின்னும் சிலந்திகள் மத்தியில, சில தேனீக்களும் பவனி வந்து, மக்களையும் கவிஞர்களையும் பிரிக்கும் சக்திகளை உடைத்தெறிந்து, உயர்ந்த இலட்சியங்களை மக்களுக்கு நேரடியாக வழங்கவே செய்கின்றன.


Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்
‘தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை’

நீலம் சில்க்



2003ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது “நீலம் சில்க்” இல் கிடைக்கின்றன.

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



தாயின் கர்ப்பத்தினுள் கருக்கட்டிய காலந்தொட்டு இறக்கும் வரை நாம் ஒவ்வொருவரும் இடை யறாது கணத்திற்குக் கணம் மாற்றமும் வளர்ச்சியு மடைந்து கொண்டுதான் வாழ்கின் றோம். பிரச்சனை இல்லாத வாழ்வு ஒரு வருக்குமே அமைவதில்லை. பிரச்சனை வருமுன் தடுத்திட வும், வந்தபின் சரிவரச் சமாளித்திடவும் எமது எதிர் நீச்சல் முயற்சியான எம் வாழ்க்கையில் நாம் பின்வரும் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக் கலாம். எமது பிழைகளை உணர்ந்து ஏற்றுக் கொள்ளாது, நாம் பிடிவாதமாக அப்படியே கொஞ்சங்கூட மாறாமல் இருந்து, எம் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பலியாகிப் பாதிப் படைந்து அல்லது சூழலிற்கேற்ப எங்களை மாற்றிக் கொள்ளவதன் மூலம், சதா மாறிக் கொண்டு சுறுசுறுப்பாகச் சுழலும் வாழ்வின் சவால்களைச் சமர்த்தாய்ச் சமாளித்துத் தீவிர முயற்சியின் பயனாய் வெற்றியடையலாம். நாம் இப்போதிருக்கும் இடத்திற்கும் நாளை போக விரும்பும் இடத்திற்குமுள்ள இடைவெளியை எமது வளர்ச்சியால் நிரப்பி முன்னேற்றலாம். ஆம்! நாம் எவ்வித நிலையிலிருந்தாலும் எம் ஒவ்வொரு வருக்குள்ளும் தவறாது உறங்கிக் கிடக்கும் தனித்துவச் சிறப்பியல்புகளை எமது முயற்சியால் வெளிக்கொணரலாம். மானிடத்தின் பரிணாமங் ளாகிய ஆத்மா, உள்ளம், உணர்வு, உடல் ஆகியவற்றைச் சரிவிகித சமானமாகப் போஷித்துக் கட்டியெழுப்புவது தான் ஆளுமை வளர்ச்சி. கடந்த சில ஆண்டுகளாக கனடா M.P கோணேஷின் ITBC - ITR தமிழ் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆங்கில, தமிழ் எழுத்தோவியங்கள் மூலம், நான் தமிழ் மக்களின் ஆளுமை வளர்ச்சியை ஊக்குவிக்கும் முயற்சிக்கு இயன்றவரை என்னை அர்ப்பணித்திருக்கின்றேன்.

ஆளுமை வளர்ச்சி ஒரு மகத்தான அனுபவம். எவ்வளவு நாம் வளர்கின்றோமோ, அவ்வளவிற்கு எமது அறிவும் வளர்கின்றது. அத்துடன் இன்னும் மென்மேலும் வளர நாம் உந்தப் படுகின்றோம். உங்களுக்குள்ளிருந்து இன்னும் எத்தனையோ நல்ல விஷயங்கள் வெளிவரவுள்ளன. உங் களைப் பற்றி, உலகைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி இன்னும் எத்தனையோ விஷயங்களைப் பற்றி நீங்கள் அறிந்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை எத்தனையோ புதிய உறவு களைச் சந்திக்கப் போகின்றீர்கள். எத்தனை எத்தனையோ புதிய விஷயங்கள் உங்களை எதிர்கொள்ளப் போகின்றன. எத்தனையோ தகவல்கள் நிகழ்வுகள் நடைபெறப் போகின்றன. என்ன செய்வது? இவற்றை எல்லாம் எப்படிச் சமாளிப்பது என்று திண்டாடித் தவிப்பதைத் தவிர்த்து ஒரு புதிய முயற்சியை ஒரு தேடலை, என் வார்த்தைகளை வாசிப்பதால் இப்போ ஆரம்பித்துள்ளீர்கள். எதை எதை எப்படி எப்படிச் செய்வதால் பிரச்சனைகளைச் சமாளிக்கலாம் என்பதைப் பழகப் போகிறீர்கள் நிச்சயம் வெற்றியடையப் போகிறீர்கள் பயந்து பயந்து ஒன்றுமே செய்யாமலிருப்பதை விட்டு, நம்பிக்கையுடன் இனிமேல் திட்டத்துடன் செயற்படப் போகின்றீர்கள். நீங்கள் எவ்வளவு புத்திசாலி, தைரியசாலி யாவருக்கும் எடுத்துக் காட்டாப் போகிறீர்கள்.

ஏற்கனவே பல பரிணாமங்களில் உங்கள் வளர்ச்சி தெரிகின்றது. நீங்கள் இதை வாசிப்பதால் ஒரு அடி எடுத்தாகி விட்டது. இப்போது மற்ற அடி எடுத்து வைக்கப் போகிறீர்கள். உங்களுக்குள் மறைந்திருக்கும் பேராற்றலை தெய்வீகத்தை ஊடுருவி அந்த ஞானத்தை வெளிக்கொணரும் செயற்பாட்டை ஆரம்பிக்கப் போகின்றீர்கள். உங்களைப் பற்றிய முழுவதையும். அறிந்து கொள்ளப் போகின்றீர்கள். நீங்கள் உண்மையில் எவ்வளவு தெய்வீகமான ஆத்மாஸ்வரூபி என்பது இப்போ உங்களுக்குப் புரிகின்றதா?

அன்பார்ந்தவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் எந்த நிலையிலிருந்தாலும் சரி, என்னால் இயன்றவரை உங்களுக்கு உதவவேண்டும் எனும் பேராவலுடன் ஒரு நிபந்தனையுமின்றி உங்களை நான் நேசிக்கிறேன். நான் கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு. எனக்குப் புரிந்ததை விட இன்னும் நான் அறிந்து கொள்ள எவ்வளவோ இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். ஆயினும் உங்கள் ஒவ்வொருவருடயை ஆளுமையைப் போஷித்து வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தால் தான், நான் எழுதுபவற்றை எங்கெங்கெல்லாமோ தேடிப் பொறுக்கி, எனது அனுபவச் சாயத்தையும் பூசி இதோ உங்கள் முன் படைகின்றேன். பொறுமையாக என் வார்த்தைகளை வாசிக்கும் இச் செயலினால் மட்டுமே நீங்கள் எவ்வளவு வளர்ந்து விட்டீர்கள் தெரியுமா? காலம் வரும்போது எல்லாம் உங்களுக்குக் கைகூடும். உங்களுக்குத் தெரியாமலே சிறு வயது முதல் நீங்கள் பாடுபட்டுத்

## லலிதா புரூடி

தேடிக் கொண்டிருந்த லௌகீக நலன்களுடன் ஆன்மீக விழிப்புணர்வும் உங்களை நாடி வரும்போது அவற்றையெல்லாம் ஏற்றுச் செயற்பட நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டுமல்லவா?

ஆமாம்! ஆளுமை வளர்ச்சி மகத்தானதோர் அனுபவம் தான். உங்கள் வளர்ச்சி அழகானதாக இருக்கலாம். அழகற்றதாகவும் இருக்கலாம். எல்லையற்ற தைரியத்தையும், பலத்தையும் உங்களுக்குக் கொடுக்கலாம். சிறைப்படுத்திக் கட்டுப்படுத்தவும் செய்யலாம். சிந்தனையைத் தூண்டி பிரகாசிக்கப் பண்ணலாம். அல்லது ஒரேடியாக அதைத் தூர்த்தும் விடலாம். மகிழச்சியுடன் துயரையும் தரலாம். "அப்பாடா! கடைசியாய் என் வாழ்க்கையில் எல்லாம் அமைந்துவிட்டது! நன்றி இறைவனே!" எனது சற்று ஓய்ந்திருக்கும்போது "ஓஹோ! அப்படியா நினைக்கிறாய்? இந்தா! இதைப் பிடி இப்போ", என வாழ்வு ஒரு பெரிய சவாலை ஓர் இழப்பை ஒரு துக்கத்தை எமக்குமுன் வைக்கிறது! அப்போ என்ன செய்கின்றோம்? அதையும் ஏற்றுக் கொண்டு எதிர் நீச்சலிட்டுச் சமாளிக்கின்றோம் அல்லவா? "ஐயோ கடவுளே! போதுமப்பா சோதனை! இனிமேல் என்னால் தாங்க முடியாது! எது பிழை என்று நன்கு தெரிந்தும் திரும்பத் திரும்ப அதே பிழையைத் தான் செய்கின்றேனே! சிறு முன்னேற்றத்தையும் காணவில்லையே, என்று தலையைப் பிய்த்துக் கொள்ளும் போது அட கடைசியில் அவ்வளவு பிழையாயில்லை என்பாடு இப்போ சமாளிச்சிட்டனல்ல எல்லாத்தையும் வடிவாய்" என்று பெருமிதமடைய வைக்கின்ற தல்லவா?

தொடர்ச்சி 6ஆம் பக்கம்


RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.

RE/MAX Golden Way Realty Inc.



வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

Office: 416-299-8199
Home: 416-516-9897
Pager: 416-510-7755

3390 MIDLAND AVE.
UNIT 8, TORONTO, ON.
M1V 5K3

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம்

ஸ்ரீநிவாஸ் நிலையம்






சகல இந்துமத கிரியைகள்
- திருமணம்
- பூப்புனித நீராட்டுவிழா
- குடிபுகுதல்
- வியாபாரதோச பரிகாரங்கள்
- சமய சம்பந்தமான மங்கல வைபவங்கள்

சகல இந்துமதக் கிரியைகளும் ஆகம விதிமுறைப்படி செய்வதற்கு

சர்வன் ஐயர் (சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்)
குகன் ஐயர் (பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா)
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி

சர்வன் ஐயர் - 416-609-0863, 416-292-0423
416-891-6360
குகன் ஐயர் - 416-292-6089



விசேட வைபவங்களுக்கு
(பிராமணாள்) சைவ உணவுகள்
ஒடருக்கு செய்து கொடுக்கப்படும்

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை





## Sport Utility Vechile வாங்குவது நன்மை தருமா?

